DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-10/LW11- அமரஜோதி | Village | |
| Husband's Name | ஹரிகிருஷ்ணன் | Taluk | |
| Age | 60 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.08.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**எதிரி ஆஜர். எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி தான் Crl.M.P. மனு தாக்கல் செய்துள்ளதாக கூறினார். அதனால் சாட்சியை விசாரணை செய்ய வேண்டாம் என்று நீதிமன்றத்தில் தன் வழக்கறிஞர் திரு.செல்வராஜ் வரும்வரை சாட்சியை எடுக்க வேண்டாம் என்று கூறியதால், முதல் விசாரணை அவர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பட்டது.**

மீண்டும் எதிரி சந்திரா தான் நீதிமன்றத்தில் இன்று மனு சட்டப்பிரிவு 256 CrPC பிரிவில் தாக்கல் செய்து இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டு உத்தரவு பிறப்பித்த பின்னர் சாட்சியை விசாரிக்கும்படி கூறினார். பின்னர் தான் இன்று நீதிமன்றத்தில் அளித்த மனுவை திரும்ப பெறுவதாக சாட்சியை ,தானே குறுக்கு விசாரணை செய்து கொள்வதாக கூறியதன் பெயரில் அவர் அளித்த மனு அவரிடமே அவரது வேண்டுகோளுக்கிணங்க திரும்ப அளிக்கப்பட்டு....

**சாட்சியின்முதல் விசாரணை-**

நான் தற்பொழுது கடலூர் மாவட்டம் நெடுஞ்சாலை துறை அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி சந்திரா நான் பணிபுரியும் அலுவலகத்திலேயே உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 24.03.2022 ம் தேதியன்று, பவானி, காவல் நிலைய உதவி ஆய்வாளர், என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆஜர் எதிரி சந்திரா மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை கைது செய்துள்ளதாகவும் கூறினார்கள். ஆஜர் எதிரி உங்கள் அலுவலகத்தில் என்ன நிலையில் பணிபுரிகிறார் என்று கேட்டார்கள், அதற்கு நான் உதவி பொறியாளராக பணிபுரிவதாக கூறினேன். மேலும், அவர் ஏதேனும் அலுவலகத்தில் விடுமுறை சொல்லி சென்றுள்ளாரா என்று கேட்டதற்கு, அவர் அலுவலகத்திற்கு எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்தேன். அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக எனக்கு தெரிவித்தார். இந்த தகவலை எனது பொறுப்பு அதிகாரியான வேலூர் மாவட்ட பொறுப்பு அதிகாரிக்கு தெரிவித்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது அலுவலக தொலைபேசி எண்ணிற்கு மகேஸ்வரி என்ற உதவி ஆய்வாளர் எனக்கு தெரிவித்தார். நான் அன்று அலுவலகத்தில் இருந்தேன். 25.03.2022 ம் தேதியன்று, காலை சுமார் 10.00 மணியளவில், எனக்கு பெயர் நினைவில்லை, எனது அலுவலகத்திற்கு வந்து எதிரி மீது

பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசலை என்னிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டு அளித்தார்.

அன்று விடுமுறை. போலீசார் வேண்டுகோளுக்கிணங்க நான் அலுவலகத்திற்கு வந்து கையெழுத்திட்டு, பெற்றுக் கொண்டேன். தேதி நினைவில்லை, காவல் துறையினர் எதிரி என்னவாக எனது அலுவலகத்தில பணியாற்றி வருகிறார் என்று மட்டும் விசாரித்தார்கள். நான் தகவல் தெரிவித்தேன்.

SI மகேஸ்வரி போனில்தான் விசாரித்தார். நேரில் விசாரிக்கவில்லை. நான் முதல் தகவல் அறிக்கை வாங்கிய பின்னர் 25.03.2022 ம் தேதியன்று, மின்னஞ்சல் மூலமாக எனது தலைமை பொறுப்பாளரான கோட்ட பொறியாளருக்கு, போனில் தகவல் தெரிவித்துவிட்டு, அனுப்பி விட்டேன்.

நான் மேலே சொன்ன அதிகாரியை தவிர வேற யாருக்கும் அனுப்பவில்லை. ஆனால் கோட்ட பொறியாளரின் அனுமதி பெற்றுத்தான் தலைமை பொறியாளருக்கு அனுப்பினேன். நான் மறுநாள் தலைமை பொறியாளருக்கு FIR நகலை நேரிலும் அளித்தேன்.

உதவி பொறியாளர் என்பது தனி அலுவலக பொறுப்பாளர் அதனார் உங்களிடம் தகவல் சொல்லி செல்ல வேண்டிய அவசியம் இல்லை. என்று சொன்னால், சரிதான். எதிரி AD க்கு தகவல் தெரிவிக்க வேண்டும். பின்னர் அவர் எனக்கு தகவல் தெரிவிப்பார்.

நான் 30.09.2023 ம் தேதி வரை பணியிலிருந்தேன். நான் பணியில் இருந்தவரை இந்த முதல் தகவல் அறிக்கையின் பெயரில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரிதான். எனக்கு மேல் நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை. முதன்மை இயக்குநர்தான் எடுக்க வேண்டும். நான் பணியிலிருந்து ஓய்வு பெறும்வரை அவர் நடவடிக்கை எடுக்கவில்லை.